<u>**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம் மேட்டூர்**</u>

**STC.C.No. 1764/2019** **நாள்: 07.01.2023**

**ம.சா.3 மாதேஷ்குமார், மேலாளர், கரூர்வைஸ்யா வங்கி, நாமக்கல் கிளை**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

1) நான் மேலாளரா என்றால் Development Officer. துணை மேலாளர் பதவி ஆகும். மேலாளரிடமிருந்து எழுத்துபூர்வமான கடிதம் ஏதேனும் சாட்சியமளிக்க பெற்று வந்துள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் இருந்து யாருக்கு சம்மன் சார்வு செய்யப்பட்டது என்றால் வங்கி கிளை மேலாளருக்கு சார்வு செய்யப்பட்டது. அதனால் நான் சாட்சியமளிக்க எனக்கு அதிகாரம் இல்லை என்றால் மேலாளருக்கு வேலை பளு அதிகமாக இருந்ததால் என்னை அனுப்பிவைத்தார். ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியமளிக்கிறேன். காசோலை திருப்பப்பட்ட அன்று மஞ்சு காண்ட்ராக்டர் என்ற பெயரில் எவ்வளவு தொகை இருந்தது என்றால் Zero **balance** தான் இருந்தது. சந்தோஷ்குமார் பெயரில் தாக்கல் செய்யப்பட்ட காசோலையை தவிர வேறு நபர்கள் பெயரில் காசோலை தாக்கல் செய்யப்பட்டு காசோலை திருப்பப்பட்டுள்ளதா என்றால் 01.01.2019 முதல் 01.01.2022 வரையிலான காலகட்டத்தில் வேறு காசோலைகள் திருப்பபடவில்லை. அதுவரை அவரது வங்கி கணக்கு genuine ஆக தான் இருந்தது என்றால் ஆமாம். அதிகபட்சமாக சந்தோஷ்குமார் எவ்வளவு வரவு செலவு வைக்கப்பட்டுள்ளது என்றால் ரூ.10,525/- இருந்தது. எந்த வழக்கிற்கு சாட்சியமளிக்க சம்மன் வந்தது என்றால் STC 1363/2019 STC 1764/2019 சம்மன் சார்வு செய்யப்பட்டுள்ளது. சாட்சியமளிக்க கிளை மேலாளருக்கு தான் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது என்றும் அதனால் நான் சாட்சியமளிக்க எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்டது.**

**ஒம்/-அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**